[4th November 1966

*திரு. எம். எஸ். செல்வராஜன் : திட்டத்தின் உத்தேச மதிப்பு என்ன ?*

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** *அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.*

* 372 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any new schemes are being envisaged for augmenting the drinking water-supply in Ootacamund; and

(*b*) if so, the details thereof?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** *(அ) புதிய திட்டங்கள் எதுவும் பரிசீலனையில் இல்லை.*

*(இ) கேள்விக்கு இடமில்லை.*

**திரு. வை. சங்கரன் :** *தற்போதுள்ள நீர் நிலையங்களில் குடி தண்ணீருக்காக தேக்கப்படும் நீர் அன்றாட அதிகபட்ச தேவைக்குப் போதவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகையால் ஏதாவது புதிதாக டாம்ஸ், ரிசர்வாயர்களைப் பயன்படுத்துவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?*

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** *இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீம் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. அதனுடைய மதிப்பு 21.51 லட்சம் ரூபாய். அதில் நான்கு ஸ்டேஜ்கள் இருக்கின்றன. அவை—*

(1) Tapping additional sources by constructing diversion weirs. Laying conveying mains and constructing off-take chamber.

(2) Relaying of distribution system in zones 5, 6 and 7 out of 9 zones.

(3) Relaying of distribution system in the remaining zones.

(4) Construction of an earthern dam across Gorishola Stream with surplus arrangements and constructing in-take tower.

*Prevention of Adulteration of Food.*

* 373 *Q.*—Sri V. SANKARAN : } Will the Hon. the
Sri T. P. ALAGAMUTHU :

Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have made any recommendation to the Centre indicating the urgent need to make some changes in the Prevention of Adulteration of Food Act; and

(*b*) if so, the details thereof?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) & (*b*) The Government of India have been requested to take action to amend the Act by deleting the proviso allowing 2.5 parts of lead in one million parts of turmeric in Appendix-B of the Prevention of Food Adulteration Rules so that colouring by harmful ingredients or unharmful ingredients would not be permitted.

4th November 1966]

**திரு. வை. சங்கரன் :** இதைத் தவிர பல முறையீடுகள், மதுரை-இராமநாதபுரம் சேம்பர் ஆப் காமர்ஸில் இருந்தும், அதோடு புட் அடல்ட்ரேஷன் ப்ரிவென்ஷன் அட்வைசரி கமிட்டி அமைக்கப் பட்டு அந்தக் கமிட்டியிலிருந்து இது சம்பந்தமாக ஆக்டை அமென்ட் செய்ய வேண்டுமென்று வந்த சிபார்சுகள் பரிசீலிக்கப் பட்டனவா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** மதுரை சேம்பர் ஆப் காமர்ஸ், மற்றும் கமர்ஷியல் ரெப்ரசென்டேடிவ்களெல்லாம் கொண்ட ஒரு மீட்டிங் போட்டு அவர்களுடைய சிபார்சுகள் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கலப்படம் செய்வதிலே உற்பத்தி இடத்திலே அந்தக் குற்றத்திற்கு முழுக்க முழுக்க காரணமாக இருக்கக் கூடியவர்கள் உற்பத்தி ஸ்தானத்திலே இருக்கிறார்கள். உற்பத்தி ஸ்தானத்திலேயே அந்தக் குற்றத்தை களையக்கூடிய ஏற்பாடு என்ன இருக்கிறது? இயல்பாக அந்தக் குற்றத்திற்கு காரணம் இல்லாதவர்கள் தண்டனைக்குள்ளாகக் கூடிய கஷ்டம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ? அதைக் களைவதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** மஞ்சள் கலப்படத்தைப் பொறுத்த வரையில் உற்பத்தி செய்யக்கூடிய இடத்தில்தான் அது விளையக்கூடிய பூமியில் இருக்கக்கூடிய லெட் காரணமாக மஞ்சளில் அதிகமாக லெட் உள்ளது என்று கூறியதற்குப் பிறகு, கோயம்புத்தூர் அக்ரிகல்சரல் பார்மில் அவர்கள் ஒப்பினியனைக் கேட்ட பிறகு டெர்மெரிக் உற்பத்தி செய்யக்கூடிய பூமியில் அவ்வளவு லெட் கன்டென்ட்ஸ் இல்லை என்று தான் ரிப்போர்ட் வந்திருக்கிறது.

**திரு. செ. மாதவன் :** சாதாரணமாக வியாபாரிகள்தான் கலப்படச் சட்டத்தின் கீழ் நகராட்சி சுகாதார அதிகாரிகளால் பிடிக்கப் படுகிறார்கள். உற்பத்தி ஸ்தானத்தில் கலப்படக் குற்றம் தவிர்க்கப் படவேண்டும். உற்பத்தி ஸ்தானத்தில்தான் பெரிய வியாபாரிகள் மஞ்சளில் கலப்படம் செய்து அனுப்புகிறார்கள். உற்பத்தி ஸ்தானத்தில் கலப்படம் செய்யும் பெரிய வியாபாரிகள் பல பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் தண்டனைக்குள்ளாகிறவர்கள் விற்பனை செய்கிறவர்கள்தான். இந்த நிலையை மாற்றி அமைப்பதற்கு சட்டத்தை மாற்றுவது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** உற்பத்தி செய்பவர்கள் மஞ்சளில் கலப்படம் செய்கிறார்கள். ரீடைல் டீலர்ஸ் விற்கும் பொழுது அவர்கள் தண்டனைக்குள்ளாகிறார்கள் என்று சொல்லப்பட்டது. இதற்கு தீவிரமாக ஒரு கமிட்டி அமைத்து, அதில் இதைப் பற்றி ஆராய்ந்து பார்த்த பிறகு இந்தக் குற்றம் ஹோல்ஸேல் டீலர்களிடமும் இருக்கிறது, ரீடைல் டீலர்களிடமும் இருக்கிறது என்று கண்டுபிடித்த பிறகு தான், ரீடைல் டீலர்களும் இந்தச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள் என்று கூறிக்கொள்கிறேன்.

[4th November 1966

திரு. வை. சங்கரன் : மதுரை-இராமநாதபுரம் சேம்பர் ஆப் காமர்ஸ், புட் அடல்ட்ரேஷன் ஆக்ட் சம்பந்தமாகக் குறிப்பிட்டு இன்னென்ன திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்று அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பியிருக்கிறார்களா? இப்பொழுது அரசாங்கம் ஒரு திருத்தம் சம்பந்தமாகச் சொன்னார்கள். பாக்கியுள்ள திருத்தங்கள் சம்பந்தமாக ஏதாவது இந்த அரசாங்கம் சிபார்சு அனுப்பி வைத்திருக்கிறார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த ஆக்ட் அடிப்படையில் எல்லா உணவுப் பண்டங்களின் அடல்ட்ரேஷனும் வருகிறது. ஆகையால் அதுதான் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

*Employment opportunities*

* 381 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any study has been undertaken by the State Employment Service to assess the Engineering personnel required during the Fourth Plan period; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) A copy of the report has been placed in the Legislature Library.

திரு. வை. சங்கரன் : அதைப் பார்த்த பிறகு உப கேள்வி கேட்க சந்தர்ப்பம் இருக்காது. ஆகையால் இந்தக் கேள்வியை நாளைக்கு ஒத்தி வைக்க ஏற்பாடு செய்யலாமா ?

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் அவர்கள் இப்போதே அதைப் படிக்கலாமே ?

* 382 கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) அங்கஹீனமானவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க சட்டமியற்றும் உத்தேசம் சர்க்கார் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) மத்திய அரசு அத்தகைய சட்டமியற்றுவதற்காக நமது ராஜ்யத்தின் கருத்து கோரியுள்ளதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) & (இ) இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அங்கஹீனமானவர்களுக்கு, குறிப்பாக கண் இழந்தவர்களுக்கு, கை கால் முடமானவர்களுக்கு விசேஷமான பயிற்சி எல்லாம் கூட பல இடங்களில் கொடுக்கப்பட்டு வருகிறது. அத்தகைய பயிற்சி பெற்ற அங்கஹீனமானவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசாங்கம் விசேஷமாக என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்று அறியலாமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The need to provide special facilities in rendering employment assistance to the physically handicapped has been widely recognised and a Special